பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 17 | திங்கட்கிழமை | 02.12.2024 | அதிர்வு 122

## ஓமந்தையில் குடும்பஸ்தர் வாளால் வெட்டிக்கொலை!



(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை – சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர்

06

# மாவீரர் தினம் அமைதியாக அனுஷ்டிப்பு! தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து இல்லை!!

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு

"மாவீரர் தினமன்று வடக்கு, கிழக்கு மக்கள் அமைதியான முறையில் தமது அன்புக்குரியவர்களை நினைவேந்தினார்கள். அதனால் தேசிய பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை."

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் எச்.எஸ்.துய்யகொந்த தெரிவித்தார்.

05





# மாவீரர்களை நினைவேந்த தமிழருக்கு முழு உரிமை உண்டு

## தென்னிலங்கை இனவாதக் கும்பலுக்கு அமைச்சர் வசந்த சமரசிங்க சாட்டையடி

"வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் தமது உறவுகளான மாவீரர்களை நினைவேந்த முழு உரிமை உண்டு. தெற்கில் அரசியலில் புறக்கணிக்கப்பட்டவர்களே மாவீரர் தின விவகாரத்தைக் கையில் எடுத்து இனவாத முரண்பாடுகளை மீண்டும் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர்."

– இவ்வாறு வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் மீண்டும் பிரிவினைவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வேண்டிய தேவை வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களுக்குக் கிடையாது. தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசுக்கு

06

## பிரபாகரனின் பிறந்த தின நிகழ்வு:

# சிவாஜிலிங்கம் உட்பட ஐவரிடம் விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட

06






பழங்கதை பேசுவதும் இந்தப் பத்தியில் இடம்பெறும் விடயம் என்பதனால் இன்று ஒரு பழைய விவகாரம் குறித்து குறிப்பிட விரும்புகிறேன். அதற்குக் காரணம் உண்டு.

இது நடந்தது 2006 ஒக்டோபர் என நினைக்கிறேன். 18 வருடங்களுக்கு முந்திய பழங்கதை.

அப்போது நான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழினதும், கொழும்பிலிருந்து வெளிவரும் 'சுடர் ஒளி' நாளிதழினதும் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இலங்கையில் இரண்டு வெவ்வேறு இடங்களில் இருந்து வெளியாகும் இரண்டு நாளிதழ்களின் ஆசிரியராக ஒரே சமயத்தில் பல ஆண்டுகள் தொடர்ந்து பொறுப்பு வகிக்கும் வாய்ப்பு எனக்கு மட்டும்தான் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன்.

அச்சமயத்தில் இந்தியாவிலிருந்து சுமார் இருபது மூத்த பெண் ஊடகவியலாளர்கள் கொழும்புக்கு ஊடகச் சுற்றுலாவுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். பெரும்பாலும்

05

### வெள்ளப் பேரிடர் பாதிப்பு தொடர்பில்

# கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை சந்தித்துக் கலந்துரையாடிய சிறீதரன்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுப்பிரமணியம் முரளிதரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறிப்பாக, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இடர் உதவிகளை வழங்குதல், இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்தல் உள்ளிட்ட அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்பட வேண்டியுள்ள உள்ளக வீதிகளைச் சீரமைத்தல் குறித்தும், அடுத்த ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.



இந்தச் சந்திப்பில் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிறப்பு - இறப்பு பதிவாளர் வாகன விபத்தில் மரணம்

### யாழ். மானிப்பாயில் சோகம்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கார் – மோட்டார் சைக்கிள் விபத்தில் பிறப்பு – இறப்பு பதிவாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிறப்பு – இறப்பு பதிவாளரான தாவடி கிழக்கைச் சேர்ந்த அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் பகுதியில் இருந்து தாவடி நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளை எதிரே வந்த கார் மோதி விபத்துக்குள்ளானதில், படுகாயமடைந்தவரை யாழ் . போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை வழியில் உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். குருநகர் இறங்குதுறையை மிக விரைவில் புனரமைப்போம்!

## அப்பகுதி மக்களுக்கு ஆளுநர் உறுதியளிப்பு



யாழ். குருநகர் பிரதேச மக்களின் நீண்ட கால கோரிக்கையாக உள்ள இந்தப் பிரதேசத்துக்கான துறைமுகத்தை அமைப்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் ஊடாகக் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் உலக கடற்றொழிலாளர் விழா குருநகர் தொழிலாளர் இளைப்பாறு மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

”விவசாயம் மற்றும் கடற்றொழில் வடக்கு மாகாணத்தின் முக்கியமான தூண்கள். இந்தப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக யாழ். மாவட்ட செயலராக நான் பணியாற்றிய காலத்தில் பல்வேறு விடயங்களைச் செய்திருக்கின்றேன். அன்றும் இன்றும் உங்கள் பிரதேசத்தின் பிரதேச செயலராக இருக்கின்ற சா.சுதர்சனும் இதில் முக்கிய பங்காற்றியிருக்கின்றார். கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்ற இ.சந்திரசேகர், எமது பிரதேசத்தின் மேம்பாடு தொடர்பில் அக்கறையுள்ளவர். அவர் பலவற்றை உங்களுக்காகச் செய்வார்.

கடந்த காலத்தில் உங்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் பகுதிக்கு துறைமுகம் அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யபட்டபோதும் அது சாத்தியமாகவில்லை. அதன் தேவைப்பாட்டை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் கடற்றொழில் அமைச்சருடன் இணைந்து அதைச் செயற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

நீங்கள் இன்றைய தினம் ஓய்வுபெற்ற மீனவர்களைக் கௌரவிக்கின்றீர்கள். அது பாராட்டப்பட வேண்டிய விடயம். இவ்வாறான உதவிகளைச் செய்வது சமூகத்தின் முன்னேற்றத்துக்குத் தேவையானது. இந்தப் பிரதேசத்தின் – கடற்றொழிலாளர்களின் தேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து நாங்கள் பணயாற்றுவோம்.” – என்று தனது உரையில் ஆளுநர் குறிப்பிட்டார்.

முன்னதாக ஆசியுரையாற்றிய குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்தந்தை யாவிஸ் அடிகளார்,

“வடக்கு மாகாண ஆளுநராக பொருத்தமான ஒருவரைத்தான் நியமித்திருக்கின்றார்கள். அவரை எந்த நேரத்திலும் யாரும் அணுக முடியும்.

இந்த மாவட்டத்தின் மாவட்டச் செயலாக இருந்து பல அபிவிருத்திப் பணிகளைச் செய்தவர். மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ளக் கூடிய ஒருவர். அவரது காலத்தில் இந்த மாகாணம் முன்னேற்றமடையும் என நம்புகின்றேன்.” – என்றார்.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் யூலியன் சகாயராஜா தனது உரையில், 1990 ஆம் ஆண்டு போர்க்காலத்தில் இந்தப் பகுதியிலிருந்த வெளிச்சவீடு அழிக்கப்பட்டதாகவும், அதை மறுசீரமைத்துத் தருமாறும் கோரிக்கை முன்வைத்தார். அத்துடன் துறைமுகத்தையும், அந்தப் பிரதேசத்தின் பிரதான வீதியையும் புனரமைத்துத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஐ.சி.சியின் தலைவராக ஜெய் ஷா பதவியேற்றார்



சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவராக ஜெய் ஷா தமது கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்.

அவர் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவராக கடந்த ஒகஸ்ட் மாதம் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஜெய் ஷா தற்போது ஆசிய கிரிக்கெட் பேரவையின் தலைவராக செயற்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவராக கிரேக் பார்க்லே செயற்பட்டிருந்தார்.



# வடக்கு முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகளிடம் ஆளுநர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் மன்றத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகம் தலைவர் இ.ஜெயசேகரன் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நகரில் அமைந்துள்ள புதிய சந்தைக் கட்டடத் தொகுதியில் மிக நீண்ட காலமாக பயன்பாடில்லாது இருக்கும் தளத்தை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதன் ஊடாக அவர்களுக்கு நிரந்தர சந்தை வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என வணிகர் கழப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டினர். யாழ். மாநகர சபையுடன் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை முன்னெடுக்க பலர் ஆர்வமாக உள்ளபோதும் அவர்களுக்கான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான இடங்களையும், அனுமதிகளையும் பெற்றுக்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதாக வணிகர் கழகப் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். அதற்குப் பொருத்தமான இடங்களை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் ஒதுக்கினால் அவற்றை குத்தகை அடிப்படையில் அவர்களுக்கு வழங்க முடியும் எனவும், அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரே கூரையில் அலுவலர்களை ஒழுங்கு படுத்தினால் இலகுவாக இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பிரதேச செயலர் பிரிவுகளில் இடங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் அதற்கான தடைகள் இருக்காது என நம்புவதாகவும், அவற்றைச் செய்ய முடியும் எனவும் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் முதலீட்டாளர்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கக் கூடிய இடங்களை அடையாளப்படுத்திய பின்னர் வருடத்தில் ஒரு தடவையாவது முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினால் அனுகூலமான பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என வணிகர் கழகப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஆளுநர் அதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவ



தாகத் தெரிவித்தார்.

வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் இடையிலான குளிரூட்டப்பட்ட பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு ஆளுநரிடம் யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர். விரைவில் அவற்றை ஆரம்பிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

யாழ். சத்திர சந்தையை புனரமைக்குமாறும், கடந்த காலத்தில் இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட திட்டங்களை ஆராய்ந்து செயற்படுத்தினால் சிறப்பாக இருக்கும் எனவும் யாழ். வணிகர் கழகத்தினரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது தொடர்பில் கவனமெடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

வடக்கில் நிலவும் மணல் பிரச்சினைக்கு தெற்கிலிருந்து இங்கு மணலைக் கொண்டு வரும் யோசனையும், கடலிலிருந்து மணலைப் பெற்றுக்கொள்ளும் திட்டத்தையும் வணிகர் கழகத்தினர் முன்வைத்தனர். அவற்றை ஆராய்வதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆபத்தானதாக உள்ளது என்று சுட்டிக்காட்டிய வணிகர் கழத்தினர், தீவகப் பகுதிகளின் பொருட்கள் போக்குவரத்து டுயனெைபை உசயகவ அநஉாயளைஅ பயன்படுத்துவதன் அவசியத்தையும் முன்வைத்தனர். இவற்றுக்குச் சாதகமான நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் பதிலளித்தார்.

வடக்கில் நலிவுற்றவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு சிறந்த பொறிமுறையை உருவாக்குமாறும் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஆளுநர் அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார் என்று ஆளுநர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிக டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 45,527 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி, கடந்த மாதத்தில் மாத்திரம் 3,178 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயால் 22 பேர் உயிரிழந்தனர்.

இந்த வருடம், மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதுடில்லியில் இருந்து வெளியாகும் பெரும் ஊடக நிறுவனங்களின் பிரதம ஆசிரியர்கள், ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள் என்ற வகையறாவைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர்கள் அவர்கள். அந்த அணியில் ஒருவர் நடிகர் ஜெமினி கணேசனின் மகள் என்றும் எனக்கு நினைவு. எனினும் அவரின் பெயர் மறந்து விட்டேன்.

அந்த மகளிர் ஊடகவியலாளர்கள் கொழும்பில் தென்னிலங்கை பத்திரிகையாளர்கள், இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்றோரைச் சந்தித்து பேட்டி கண்டிருந்தார்கள்.

அதற்கு முந்திய ஆண்டில்தான் அதிகாரத்துக்கு வந்திருந்த மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அப்போது முரண்பாடும் முறுகலும் உச்சத்தில் இருந்தன. புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாக இருந்தன. இரண்டு சுற்று ஜெனிவாப் பேச்சுகள் முட்டுச் சந்தில் முடங்கிப் போய்க் கிடந்தன.

மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்த சமயத்தில் அவரின் சார்பில் சமரச செய்தி ஒன்றை – சமாதான பேச்சுக்கான அழைப்பு ஒன்றை – தலைவர் பிரபாகரனுக்கு நான் நேரடியாக எடுத்துச் சென்றிருந்தேன். அது பற்றிய செய்திகள் தென்னிலங்கை ஊடகங்களில் – குறிப்பாக 'த சண்டே லீடர்' போன்ற பத்திரிகைகளில் – விலாவாரியாக வெளியாகி இருந்தன. அதனாலும், நான் ஆசிரியராக இருந்த 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளில் செய்தி நிலைப்பாடு மற்றும் எனது ஆசிரிய தலையங்கங்கள் காரணமாகவும் புலிகளின் தரப்புக்கு மிக நெருக்கமானதாக எங்கள் ஊடகம் தென்னிலங்கையில் பார்க்கப்பட்டது.

கொழும்பில் அரசு மற்றும் சிங்களத் தரப்புத் தலைவர்களைப் பேட்டி கண்ட இந்தியப் பெண் ஊடகவியலாளர்களுக்கு, தமிழர் தரப்பில் புலிகள் ஆதரவு போக்குடைய பக்கத்தில் பேட்டி காண ஒருவரும் கிடைக்கவில்லை. அதனால் இந்திய தூதரகத் தரப்பு என்னுடன் ஒரு சந்திப்புக்கு அவர்களுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

எமது ஊடகங்களின் நிர்வாக இயக்குனருடைய கொழும்பு இல்லத்தில் அந்தச் சந்திப்பு இடம்பெற்றது. நடுநாயகமாக நான். சுமார் 20 இந்தியப் பெண் ஊடகவியலாளர்கள் என்னை கேள்விகளால் பிய்த்து உதறினர். நான் ஒருவாறு சமாளித்தேன்.

பெரும்பாலும் ராஜீவ் காந்தி கொலை பற்றிய கேள்விகளே அடுத்தடுத்து வந்தன. அதற்கான குற்றச்சாட்டை தலைவர் பிரபாகரன் மீது சுமத்தி, அவருக்கு எதிரான கருத்தை என் வாயிலிருந்து பிடுங்குவது அவர்கள் நோக்கமாக இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

ஓர் எல்லைவரை பொறுத்து, சமாளித்து போன நான், ஒரு கட்டத்தில் பதிலுக்குச் சீறத் தொடங்கினேன்.

"நீங்கள் இருபது பேரும் ஊடகவியலாளர்கள். நானும் ஓர் ஊடகவியலாளன். இவ்வளவு நேரமும் நீங்கள் கேள்வி கேட்டீர்கள். இப்போது நான் உங்களிடம் ஓரிரு கேள்விகள் கேட்க முடியுமா?" – என்று கேட்டேன்.

எல்லோரும் ஏக குரலில் 'ஆம்' என்றார்கள். நான் தொடங்கினேன்.

"இலங்கையில் இனப்பிரச்சினை யாருக்கும் யாருக்கும் இடையில்?" – என்று கேட்டேன் நான்.

"தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில்" என்று அவர்களே பதில் கூறினார்கள்.

"நல்லது. அப்படிப்பட்ட இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமானால் அதைக் காண வேண்டியவர்கள் யார், யார்?" – என்று அடுத்துக் கேட்டேன் நான்.

"தமிழர்களும் சிங்களவர்களும்" என்றார்கள் அவர்கள்.

"நல்லது. தீர்வு ஒன்று காணப்பட்டால் அது பற்றிய உடன்பாட்டில் ஒப்பமிட வேண்டியவர்கள் யார்?" என்று கேட்ட நான் தொடர்ந்து "தமிழர்களும் சிங்களவர்களும்தானே?" என்று வினவினேன். அவர்கள் "ஆம்" என்று பதிலளித்தார்கள்.

"தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஏற்பாடு என்ற பெயரில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் சிங்களவர்களின் பிரதிநிதியாக அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தமிழர்களின் பிரதிநிதியாக அமிர்தலிங்கம் அல்லது தலைவர் பிரபாகரனும்தானே ஒப்பமிட்டிருக்க வேண்டும்? அத்தகைய இணக்க உடன்பாட்டில் அதை உறுதிப்படுத்தும் பிணையாளராக வேண்டுமானால் இந்தியாவின் பிரதமர் கையொப்பமிடலாம். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டவர்கள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும்தான். தமிழர்களுடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் உடன்பாட்டில் – அவர்களுடைய தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒப்பந்தத்தில் – அவர்களுடைய (தமிழர்களுடைய) ஆணை பெற்ற பிரதிநிதியாக தாம் ஒப்பமிட முடியும் என்று இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி தீர்மானித்தார். அதனால்தான் எங்களுக்கான தீர்வில் தான் – அவர் – ஒப்பமிட்டார். ஆக, விடுதலைப் புலிகள் ராஜீவ் காந்தியைக் கொன்றார்கள் என்பது உண்மையானால், அவர்கள் உங்கள் நாட்டின் தலைவர் ஒருவரைக் கொல்லவில்லை, எங்கள் தமிழர்களின் ஆணை பெற்றுச் செயல்பட்டவர் என்று கருதிக் கொண்ட தமிழர்களின் பிரதிநிதி ஒருவரைக் கொன்றிருக்கின்றார்கள் என்றுதான் அர்த்தம். தமிழர் சார்பில் ஒப்பமிடும்போது தமிழரின் ஆணை பெற்ற பிரதிநிதியாக இருந்த ராஜீவ் காந்தி, கொல்லப்படும்போது மட்டும் உங்கள் நாட்டின் தலைவராகிவிட்டமை எங்ஙனம் நியாயம்?" – என்ற சாரப்பட நான் கேள்வி எழுப்பினேன்.

அவர்கள் எல்லோரும் என் கேள்வியை செவிமடுத்து விறைத்துப் போனார்கள். ராஜீவ் காந்தி படுகொலை பற்றிய கேள்விகளை அவர்கள் அத்தோடு நிறுத்திக் கொண்டார்கள்.

இப்போதும் கூட நீங்கள் என் பெயரை N.Vithyatharan rediff.com என்று ஆங்கிலத்தில் அடித்து google search இல் தேடினால் அந்த ஊடகத்தின் நிர்வாக ஆசிரியராக இருந்த ஷீலா பட் (அவரும் அந்தப் பெண் ஊடகவியலாளர்கள் குழுவில் ஒருவர்) எழுதிய அந்த பேட்டியை ஆங்கிலத்தில் நீங்கள் வாசிக்க முடியும். (அதன் லிங் https://www.rediff.com/news/2006/oct/17inter.htm)

அதுவல்ல விடயம்.

இந்தப் பேட்டி இந்திய ஊடகங்களில் அடுத்தடுத்த நாள்களில் பரபரப்பாக வெளியாகிய பின்னர், புலிகளின் மதியுரைஞராக இருந்த அன்டன் பாலசிங்கம் லண்டனில் இருந்து அழைப்பு எடுத்தார். அந்தப் பேட்டியை ரசித்து வாசித்திருப்பார் போலும். அதனை மெச்சினார் அவர். கொழும்பில் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்து கொண்டு, துணிச்சலாகப் பல விடயங்களை அந்தப் பேட்டியில் நான் வெளிப்படையாகப் பேசியமையை அவர் விதந்துரைத்தார். சுய பாதுகாப்புக் குறித்து கரிசனை எடுக்க வலியுறுத்தினார். ராஜீவ் காந்தி குறித்து நான் குறிப்பிட்ட விடயம் அவருக்குப் பிடித்துப் போயிற்று.

"நல்ல கருத்து. புதுவிதமான பார்வை. இந்த நிலைப்பாட்டை சுதந்திர ஊடகவியலாளனாக நீ கூறலாம். ஆனால் விடுதலைப் புலிகளாக நாங்கள் கூற முடியாது." – என்றார் அவர்.

அப்படி அவர் மெச்சிப் பேசி சில தினங்களில் அவர் புற்று நோய்க்கு ஆளாகி இருப்பது பற்றிய அதிர்ச்சிச் செய்தி வெளிவந்தது. அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னை லண்டனுக்கு அழைத்தார். லண்டனில் அடுத்து சுமார் ஐந்து வாரங்கள் அவர் இறக்கும் வரை அவரோடு அருகில் இருக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. டிசம்பர் 14ஆம் திகதி அவர் காலமானார். டிசம்பர் 22ஆம் திகதி அவரது இறுதி நிகழ்வில் பங்குபற்றி அஞ்சலி உரை ஆற்றினேன்.

அடுத்த வருடம் லண்டனில் அவரது முதலாம் ஆண்டு நினைவு தினத்தில் நான் தான் பிரதான நினைவுரையை ஆற்றினேன். பாலசிங்கத்தின் துணைவியார் அடேல் பாலசிங்கத்தின் அழைப்பின் பேரில் அந்நிகழ்வில் பங்குபற்றி சுமார் ஒன்றரை மணி நேரம் பாலா அண்ணன் பற்றிய நினைவுகளை கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் நான் பகிர்ந்து கொண்டேன். அந்த நிகழ்வை முடித்துக் கொண்டு அன்றே லண்டனில் இருந்து புறப்பட்ட நான் 17 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் லண்டன் பயணமாகும் வாய்ப்பு இப்போது பெற்று இருக்கிறேன்.

# மாவீரர் தினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு, கிழக்கில் கடந்த நவம்பர் 27ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகளை அடுத்து அநுரகுமார அரசு இந்த நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு அளித்துள்ள சுதந்திரம், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்று தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் சிலர் தீவிரமான கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் போரின்போதும், அசாதரண சூழல்களின்போது உயிரிழந்தவர்களை நினைவுகூர முடியும். அதற்கு நாங்கள் தடைகளை ஏற்படுத்தப்போவதில்லை என்பதை முற்கூட்டியே அறிவித்திருந்தோம்.

அந்தவகையில் கடந்த 27 ஆம் திகதி மாவீரர் தினமன்று வடக்கு, கிழக்கு மக்கள் அமைதியான முறையில் தமது அன்புக்குரியவர்களை நினைவேந்தினார்கள். அதனால் தேசிய பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் ஏற்படவில்லை. ஆனால், தென்னிலங்கையில் அந்த விடயங்களை வெவ்வேறு அரசியல் சுயஇலாபத்துக்காகச் சிலர் பயன்படுத்த முனைகின்றனர் என்பதை அதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

உண்மையில் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். தமது அரசியல் மீள்பிரவேசத்துக்காக வழக்கம் போலவே இனவாதத்தைத் திணிக்கப் பார்க்கின்றார்கள். ஆனால், அவர்களின் நோக்கங்களை மக்கள் அறிவார்கள்.

அநுரகுமார தலைமையிலான அரசுக்கு வடக்கு, கிழக்கு மக்கள் வாக்களித்துள்ளார்கள். அவர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். அதற்கான செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கும்.

வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இனவாதம், மதவாதம் தோல்வி கண்டுவிட்டது. மீண்டும் அதற்கு இடமளிப்பதன் ஊடாக நாட்டுக்கு எதிர்மறையான நிலைமைகளே ஏற்படும். ஆகவே, மக்கள் அத்தகையவர்களுக்கு

06

# பருத்தித்துறையில் கடற்றொழில் நீரியல் வள அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் பூட்டுப் போட்டதால் பெரும் பரபரப்பு!

## ஜனாதிபதி செயலகத்தின் தலையீட்டை அடுத்து நிலைமை வழமைக்கு

(ந.லோகதயாளன்)

கடற்றொழில் நீரியல் வள அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் என்று தன்னை அறிமுகப்படுத்திய தனி நபர் ஒருவர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் களஞ்சியசாலை ஒன்றைத் தான் கொண்டுவந்த பூட்டு ஒன்றினால் பூட்டித் திறப்பை எடுத்துச் சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் தலையீட்டை அடுத்து, அந்தப் பூட்டு மீளப் பெறப்பட்டு நிலைமை சுமுகமானது.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை, முதலாம் குறுக்குத் தெரு பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருப் பகுதியில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள களஞ்சியசாலை ஒன்றுக்கு வந்த நபர் ஒருவர், அங்கிருந்த படி களஞ்சியசாலையின் காப்பாளருக்குத் தொலைபேசியில் அழைப்பு எடுத்தார்.

தன்னைக் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சரின் ஒரிங்கிணைப்பாளர் என்று அறிமுகப்படுத்திய பின் அடாவடியில் அவர் ஈடுபட்டதுடன், எவ்வித நடைமுறைகளையும் பின்பற்றாமல் தான் எடுத்துக்கொண்டு வந்த பூட்டைக் களஞ்சியசாலையில் பூட்டிய பின்னர் அதன் திறப்புகளைத் தன்னுடன் எடுத்துச் சென்றார்.

அதன் பின்னர், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். குருநகர் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது குறித்த நபரைக் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சரின் ஒரிங்கிணைப்பாளர் என்று அறிமுகப்படுத்திய போது, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை களஞ்சியசாலைக்குப் பூட்டுப் போட்ட நபர் இவர் தான் என்பதனைக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள அதிகாரிகள் அடையாளம் கண்டுகொண்டனர்.

இதற்கிடையில், பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளரால் ஜனாதிபதி செயலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. முறைப்பாடு கிடைத்து ஒரு மணி நேரத்தினுள் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சருக்கும், சம்பந்தப்பட்ட நபருக்கும் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து வேறு நபர்கள் களஞ்சியசாலைக்கு அனுப்பப்பட்டு, சட்டவிரோதமாகப் பூட்டப்பட்ட பூட்டு மீளப்பெறப்பட்டது. அதன் பின் நிலைமை சுமுகமானது.

## மாவீரர் தினம்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இடமளிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தற்போதைய நிலையில் தேசிய பாதுகாப்பு உயர்ந்த நிலையில் உள்ளது. அதற்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவிதமான நடவக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

தென்னிலங்கையில்உள்ளகடும்போக்காளர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தவே போலிப் பிரசாரம் செய்கின்றார்கள். இது உண்மையில் தேசிய நல்லிணக்கத்தையும், சகவாழ்வையும் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். அதற்கு ஒருபோதும் மக்கள் இடமளிக்கக் கூடாது.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளின் தலைவரின் பிறந்த தின நிகழ்வு மற்றும் மாவீரர் தின நிகழ்வை வைத்து பயங்கரவாதத்தை ஆதரிக்கும் வகையில் சிலர் செயற்பட்டுள்ளார்கள். அவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எதிராக உரிய சட்டங்களின் அடிப்படையில் விசாரணைகள், கைதுகள் முன்னெடுக்கப்படுகின்றன." - என்றார்.

## மாவீரர்களை நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஆதரவளித்துள்ளார்கள்.

இந்த அரசில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பிரதான பங்காளிகளாக உள்ளனர். அனைத்து இன மக்களின் ஒத்துழைப்புடன் சிறந்த அரச நிர்வாகத்தை முன்னெடுப்போம்.

வடக்கு, கிழக்கில் மாவீரர் தினத்தைத் தமிழ் மக்கள் அனுஷ்டிப்பதால் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இனவாதத்தை முன்னிலைப்படுத்தி தெற்கில் அரசியல் செய்யும் தரப்பினர் வீணாக அச்சமடையத் தேவையில்லை." - என்றார்.

## சிவாஜிலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிறந்த தின நிகழ்வில் பங்கேற்ற ஐந்து பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறையில் விடுதலைப் புலிகளின் தலைவரது குடும்பத்தின் பூர்வீக இல்லத்தில் பிறந்த தினக் கொண்டாட்டத்துக்காகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் புகைப்படத்தைக் கொண்ட பதாகை ஒன்றும் அச்சிடப்பட்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது அங்கு வந்திருந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருடைய புகைப்படத்தைப் பயன்படுத்த முடியாது என்றும், அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த புகைப் படத்தை மறைத்துவிட்டு பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை முகநூலில் பதிவிட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பிரபாகரனின் பிறந்த தினக் கொண்டாட்டம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் சாவடைந்தார்.

இந்தக் கொடூர சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நேற்று மாலை ஓமந்தை – சேமமடு பகுதியில் மாடுகளைச் சாய்த்துக் கொண்டு வந்த குடும்பஸ்தர் மீது குழுவொன்று வாளால் வெட்டியுள்ளது. இதனால் படுகாயமடைந்த அவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும், அவர் ஏற்கனவே சாவடைந்துள்ளார் என்று வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குளம் பகுதியை சேர்ந்த செல்வநிரோயன் (வயது 46) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே வாள்வெட்டுக்கு இலக்காகிச் சாவடைந்தார்.


சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# வட்ஸ் அப் கணக்குகளை ஊடுருவி மோசடி இடம்பெறுவதாக முறைப்பாடு




வட்ஸ்அப் கணக்குகளை ஊடுருவி மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதால், மூன்றாம் தரப்பினருக்கு அவர்களின் தொலைபேசி இலக்கங்களில் பெறப்பட்ட இரகசிய குறியீட்டை (ஓடிபி) வழங்க வேண்டாம் என இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவு விடுத்துள்ளது.

ஹேக்கர்கள் வட்ஸ்அப் குழுக்களில் இணைந்து பயனர்களின் கணக்குகளைக் கண்காணிப்பதாகவும் வட்ஸ்அப் கணக்குகளை ஹேக் செய்த பின்னர், கடன் கேட்டு ஹேக் செய்யப்பட தொலைபேசியில் உள்ள ஏனைய தொலைபேசி எண்களுக்கு அவசர செய்திகளை அனுப்புவதாகவும் இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

அதன்படி, சமய நிகழ்ச்சிகள், பரிசுகளை வெல்வது அல்லது கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்பது போன்ற வாய்ப்புகளைக் குறிப்பிட்டு தொலைபேசி எண்ணில் பெறப்பட்ட இரகசிய குறியீட்டை அவர்கள் கோருவதாகக் கூறப்படுகிறது.

எனவே இப்படியான செய்திகள் வந்தால், முதலில் அந்தக் கணக்கின் உரிமையாளரைத் தொடர்பு கொண்டு, அந்தத் தகவல் உண்மையா என்பதை உறுதி செய்து, வாட்ஸ்அப் கணக்கு ஹேக் செய்யப்பட்டமை தெரிந்தால், அந்தக் கணக்கின் உரிமையாளர் உடனடியாக அவருடன் தொடர்புடைய ஏனையவர்களுக்கு அதைப் பற்றி அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக இவ்வாறான நிதி மோசடிகளை இலங்கையிலிருந்து இல்லாதொழிக்க முடியும் என இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

# லாப்ஸ் சமையல் எரிவாயு விலையில் மாற்றமில்லை

பொதுமக்களுக்குத் தட்டுப்பாடின்றி சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனம் விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

நாட்டில் கடந்த சில நாள்களாக லாப்ஸ் சமையல் எரிவாயுவிற்குத் தட்டுப்பாடு நிலவியிருந்த நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நிரோஷன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாளாந்தம் 100,00 லாப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட விலைத்திருத்தத்தில் லாப்ஸ் சமையல் எரிவாயு விலையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என பிரதம நிறைவேற்று அதிகாரி நிரோஷன் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை உள்




ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் லாப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன் விநியோகம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் லாப்ஸ் சமையல் எரிவாயு கொள்கலன் விநியோகமானது மட்டுப்படுத்தப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சமூக ஊடகங்களின் போக்கை ஒழுங்குபடுத்துவது அவசியம்

உலகளாவிய ரீதியில் சமூக பாதிப்பு விடயங்களில் முக்கியமாக இப்போது அதிகம் கவனிக்கப்படுவது சமூக ஊடகங்கள் ஊடான சிக்கல்கள்தான். சமூக ஊடகங்களின் துஷ்பிரயோகத்தினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர், சிறுமியரே. சமூக ஊடகங்களின் அசுரக் கைகளில் சிக்கிச் சின்னபின்னமாகும் பிரதான தரப்பினர் இவர்களே.

சமூக ஊடகங்கள் வாயிலாக சிறுவர்கள், சிறுமியர்கள் மற்றும் மகளிர் பாதிக்கப்படுகின்ற விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பாதிப்புகளை குறைக்க செய்யும் முயற்சிகள் உலகளாவிய ரீதியில் - சர்வதேச மட்டத்தில் - எடுக்கப்பட்டு வருகின்றன.

சமூக ஊடகங்கள் ஊடான இப் பாதிப்புகள் தொடர்பில் நலிவுற்ற தரப்பினரான மகளிர் மற்றும் சிறுவர், சிறுமியர்களைப் பாதுகாப்பதில் முக்கிய பங்களிப்பு காவல்துறைக்குரியது.

இப்போது அந்தக் காவல்துறையினுடைய - பொலிஸினுடைய - இலச்சினையையே தவறாகப் பயன்படுத்தி, சமூக ஊடகங்கள் ஊடான நாச வேலைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவது பற்றி இலங்கைப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். இது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

சமூக ஊடகங்கள் மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தடுப்பு பொலிஸ் பணியகத்தின் போலி இலச்சினையைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட நபர்களிடம் இருந்து இரகசியத் தகவல்கள் தந்திரமாகக் கறக்கப்படுவதாக இலங்கைப் பொலிஸார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்களிடமிருந்து வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் போன்ற பல்வேறு சமூக ஊடக தளங்கள் மூலமாக இரகசிய விவரங்களையும் படங்களையும் பெறுவதற்காக பொலிஸாரின் போலி சின்னங்களைப் பயன்படுத்தியமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள், குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தடுப்புபணியகத்தின்செயல்பாட்டு மையம் மற்றும் அதன் ஹொட்லைன் இலக்கமான 109 மூலமாக மட்டுமே சேகரிக்கப்படுகின்றன எனவும், சமூக ஊடகங்கள் வழியாக அல்ல எனவும் பொலிஸார் தெளிவுபடுத்துகின்றனர்.

ஆகவே, போலியான சமூக ஊடகக் கணக்குகளுக்கு பலியாக வேண்டாம் என்றும், அவர்களின் இரகசிய விவரங்களை அத்தகைய சமூக ஊடகங்களுக்குப் பகிர வேண்டாம் என்றும் பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த மோசடிக்கு ஆளானவர்கள், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு அதன் ஹொட்லைன் இலக்கமான 109 மூலம் தெரிவிக்குமாறும் அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேரடியாக முறைப்பாடு செய்யுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்புபட்ட விடயங்களில் சமூக ஊடகங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும். அதற்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கும் அதேசமயம், இவ்விடயத்தில் பொறுப்பு மீறி நடக்கும் தரப்புகள் தொடர்பில் கடுமையான தண்டனைகள், நடவடிக்கைகள் நிச்சயம் என்பதை உறுதிப்படுத்தி உணர்த்தும் செயற்பாடுகளும் தவறாது முன்னெடுக்கப்பட வேண்டும்.







# தமிழகத்தில் சிவப்பு எச்சரிக்கை

தமிழகத்தின் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரிக்கு நேற்று கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனிடையே சென்னையில் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென சென்னை வானிலை ஆய்வு மையம் எதிர்வுகூறியுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய ஃபெங்கல் புயல், மேற்கு – தென்மேற்கு திசையில் நகர்ந்து வடதமிழக – புதுவை கடற்கரையை புதுச்சேரி அருகில் நேற்று முன்தினம் இரவு 11.30 அளவில் கடந்தது.

புயல் கரையை கடக்கும் போது காற்றின் வேகம் மணிக்கு 70 முதல் 80 கிலோ மீற்றர் வேகத்திலும் இடையிடையே 90 கிலோ மீற்றர் வேகத்திலும் வீசியதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

இந்நிலையில், நேற்று காலை 8.30 மணி அளவில் அதே பகுதியில் கடலூருக்கு வடக்கே 30 கிலோ மீற்றர் தொலைவிலும் புயலாக நிலைகொண்டிருந்தது.

மேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து படிப்படியாக வலுவிழந்து அடுத்த 6 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக அதே பகுதியில் நிலவக்கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.











# புதுச்சேரியில் கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழப்பு

புதுச்சேரியில் ஃபெங்கல் புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 4 பேர் உயிரிழந்தனர் என ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று தெரிவித்தார்.

ஃபெங்கல் புயலைத் தொடர்ந்து புதுச்சேரியில் பெய்து வரும் கனமழை காரணமாக பல பகுதிகளில் மக்கள் முடங்கி உள்ளனர். இயல்பு வாழ்க்கை எப்போது திரும்பும் என்று எதிர்பார்த்து வருகின்றனர்.

இந்த மழை வெள்ளத்தில் 4 பேர் உயிரிழந்தனர் என புதுச்சேரி ஆட்சியர் குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

புதுவை கோவிந்தசாலை முடக்கு அம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் முருகேசன் (வயது 60). ஆட்டோ ஒட்டுநரான இவர் வாடகை வீட்டில் அவரது தாயார் சீதா (80) வசித்து வந்தார். இவர் வசிக்கும் பகுதிக்கு உப்பனாறு வாய்க்காலில் இருந்து வெளியேறி வெள்ளநீர் புகுந்தது.

அவரின் வீட்டில் புகுந்த மழைநீரில் முருகேசன், சீதா ஆகியோர் சிக்கித்தவிப்பதாக நேற்று அதிகாலை 2 மணி அளவில் பெரியகடை போலீஸாருக்கு தகவல் வந்தது. உடனே அங்கு விரைந்து சென்ற போலீஸார் அவர்கள் 2 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக புதுவை அரசு மருத்துவ மனைக்கு அழைத்து சென்றனர்.

அப்போது அங்கு அவர்களை பரிசோதித்தபோது முருகேசன் வரும் வழியிலேயே உயிரிழந்தார் என தெரியவந்தது. சீதாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதேபோல் ஒதியஞ்சாலை பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரம் வசித்த 50 வயது மதிக்கத்தக்க நபரும், முதலியார்பேட்டை தியாகுமுதலியார் நகர் பகுதியில் 57 வயது பெண்ணும், மேட்டுப்பாளையம் பகுதியில் 40 வயது மதிக்கத்தக்க நபரும் உயிரிழந்தனர்.

அவர்களது உடல் பிரேத பரிசோதனைக்காக புதுவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.பலியானவர்கள் யார் என பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# காசாவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஐ.நா. நிவாரண முகாம்களில் தஞ்சம்

காசாவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது பாலஸ்தீனத்துக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, சுமார் 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அங்கு தஞ்சம் அடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் தற்போது அத்தியாவசிய தேவைகள் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் மக்கள் பாரிய அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.









# மலேசியா, தாய்லாந்தில் கடும் மழை; புயல் எச்சரிக்கை தொடர்ந்தும் அமுல்

மலேசியா மற்றும் அதன் அண்டை நாடான தாய்லாந்தில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் குறைந்தது 12 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட மலேசியாவில் 122,000 இற்கும் அதிகமான மக்களும், தெற்கு தாய்லாந்தில் சுமார் 13,000 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடும் மழை மற்றும் புயல் எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் உள்ளதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என கவலை வெளியிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்குத் தற்காலிக தங்குமிடங்கள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மீட்புப் பணியாளர்கள் தயார்நிலையில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் சமூக ஊடகங்கள் மற்றும் உள்ளூர் செய்திகளில் வீடுகள் நீரில் மூழ்கியிருக்கும் காட்சிகள் காட்டப்படுகின்றன.

தாய்லாந்தின் சதெங் நோக் மாவட்டத்தில், வெள்ளத்தில் மூழ்கிய வீட்டின் கூரையிலிருந்து சிறுவன் ஒருவனை மீட்புப் பணியாளர்கள் மீட்கும் காட்சி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தெற்கு தாய்லாந்தில் வெள்ள அனர்த்தம் காரணமாக 534,000 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளன.

அதேவேளை, முடிந்தவரைத் துரிதகதியில் இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்குச் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என மலேசியப் பிரதமர் பெய்ரன்ங்ரன் ஷினவாத்ரா உறுதியளித்துள்ளார்.











# சேதமடைந்த வீதிகள், பாலங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பம்



பலத்த மழையுடனான வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எஸ். எம்.பீ.சூரியபண்டார தெரிவித்தார்.

சேதமடைந்த வீதிகள் மற்றும் பாலங்களை விரைவாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மின் கட்டணத் திருத்த யோசனை 6 ஆம் திகதி கையளிக்கப்படும்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் கட்டணத் திருத்த யோசனையை எதிர்வரும் 6ஆம் திகதி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கான தயாரிப்பு பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர், பொறியியலாளர் ஏ.டி.கே. பராக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக 6 முதல் 11 வீதம் வரையான மின் கட்டண குறைப்பு யோசனையை இலங்கை மின்சார சபை இதற்கு முன்னர் சமர்ப்பித்திருந்தது.

அதனை நிராகரித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 2025 ஆம் ஆண்டு முதல் 6 மாதங்கள் தொடர்பில் ஆராய்ந்து கட்டணத் திருத்த முன்மொழிவை மறுசீரமைக்க வேண்டும் என தெரிவித்திருந்தது.

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கண்டி, பதுளை, நுவரெலியா, கேகாலை, மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் யட்டிநுவர, உடபலாத, உடுதும்பர, தெல்தொட்டை, தொழுவ, அகுரண, மற்றும் பண்வில உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு



கடந்த சில நாள்களாக நாட்டில் நிலவிவரும் சீரற்ற கால நிலை காரணமாகப் பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் பெறப்பட்ட மரக்கறிகளின் அளவு 65 வீதமாகக் குறைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கெப்பட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலைகள் மிக அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, கடும் மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியதுடன், பயிர்கள் அழிவடைந்துள்ளன என குறிப்பிடப்படுகிறது.

இந்தநிலையில், நுவரெலியா மத்திய சந்தை மற்றும் வீதியோர விற்பனை நிலையங்களில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதால் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என குறிப்பிடப்படுகிறது.

நுவரெலியா மத்திய சந்தைக்கு வரும் பெரும்பாலான பொது மக்கள் விலை அதிகரிப்பு காரணமாக மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக தாம் பாரியளவிலான நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

அதேநேரம், மழை காரணமாக போதுமான விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாத விவசாயிகள், தமக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடமராட்சி ஊடக இல்லத்தினரால் உலருணவு பொதிகள் வழங்கிவைப்பு









சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியால நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த குடும்பங்களுக்கு, யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் சமூக செயற்றிட்டத்தின் கீழ் உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஜே/401 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட கொட்டடி, தெனியம்மன் கோயிலடி, சந்தை மேற்கு ஒழுங்கை ஆகிய இடங்களில் மழை வெள்ள பாதிப்பு மற்றும் கரையோரங்களில் அபாய வலயத்தில் வசிக்கும் 29 குடும்பங்களை சேர்ந்த 96 பேர் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

தற்போது வெள்ள பாதிப்பு படிப்படியாக குறைந்து வரும் நிலையில் குறித்த நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் நேற்றைய தினம் வீடுகளுக்கு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து 29 குடும்பங்களுக்கு யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தினரால் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு நேரில் சென்று அப்பிரிவு கிராம உத்தியோகத்தர் அரவிந் தகுமாரின் ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது தலா 1500 ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் 29 குடும்பங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# வயல் நிலங்கள் தொடர்பான மதிப்பீட்டுக்கு விசேட குழு



வெள்ளத்தால் சேதமடைந்த வயல் நிலங்கள் தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

25 மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சபை கூறியுள்ளது.

வெள்ள நீர் வடிந்த பின்னர் பயிர்ச்சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகளை இன்று ஆரம்பிக்கவுள்ளதாக சபையின் தலைவர் பிரேமசிறி ஜாசிங்கஆரச்சி தெரிவித்தார்.

அதிகளவிலான பயிர்ச்சேதம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய நிலங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வெள்ளத்தால் அழிவடைந்த நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோயா செய்கைகளுக்கு ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபாவிற்கு உட்பட்டு நட்டஈடு வழங்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இதற்காக அரசாங்கத்தால் 1,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சபை குறிப்பிட்டுள்ளது.

பலத்த மழையுடனான வானிலை காரணமாக 390,000 ஏக்கர் வரையான வயல்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

# அடுத்த 36 மணித்தியாலங்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்



தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட ஆழ்ந்த தாழமுக்கம் காரணமாக அடுத்த 36 மணித்தியாலங்களுக்கு வடக்கு, மேற்கு, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்கான அறிவிப்பை நேற்று இரவு வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஃபெங்கல் புயல், நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் வட தமிழகம் - புதுச்சேரி கரையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழைந்ததது.

ஃபெங்கல் புயல் காரணமாக இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -02.12.2024




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள். பயணங்கள் செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர் காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

உயரமுத்தம் மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்படும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இன்று காணப்படும். சரியான நேரத்தில் உணவை மேற்கொள்வது நல்லது.




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.

வலிமை மற்றும் ஆற்றல் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்று அனுசரணையுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் பல் வலியால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -02.12.2024


தனுசு

இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்பட வாய்புள்ளது. சளி மற்றும் இருமல் ஏற்படவும் வாய்ப்புள்ளது.


கும்பம்

இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பணியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறுவிதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.என்றாலும் அதிக வேலை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.


மகரம்


இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் ஆரோக்கியமான மன நிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.


மீனம்

இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். இன்று சேமிப்பதற்கும் இயலாத நிலை இருக்கும். சளி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பிரச்சினைகளால் பாதிப்பு ஏற்படலாம். எண்ணெய் பாதார்த்தங்களை தவிர்த்தல் நல்லது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAWAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park